# நமது ஈழநாடு

www.namathueelanadu.com

குரல் 03 மலர் 29 ஜனவரி 2023 மின்னஞ்சல்:: contact@namathueelanadu.com இணையம்:: www.namathueelanadu.com



Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app


"மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு, அவர்களது கஸ்டங்களைப் போக்குதற்குத் திட்டமிட்டு செயலாற்றுவதுதான் உண்மையான அரசியல் வேலை.

*- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்*





# சிதைந்த கூட்டமைப்பும் புதிய உரிமை கோரலும்

-தாயகன்-

2001ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளாக வட,கிழக்கு தமிழ் மக்கள் ஏகோபித்து ஆணைவழங்கி வந்த அரசியல் (தேர்தல்) கூட்டான ‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு’ சிதைந்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தாய்க்கட்சியாகச் செயற்பட்டு வந்த இலங்கைத் தமிழரசுக்கட்சி, அடுத்து நடைபெறுமா இல்லையா என்ற நிலையில் ஊசலாடிக்கொண்டிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை தனித்து முகங்கொடுப்பதென கடந்த 7ஆம் திகதி மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் உள்ள இராச மாணிக்கம் இல்லத்தில் நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தினை அடுத்து குறித்த துரதிஷ்டமான நிகழ்வு இடம்பெற்றிருக்கின்றது.

தமிழரசுக்கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருக்கின்றதே தவிர, கூட்டமைப்பு இன்னமும் உள்ளது. அதில் கூட்டமைப்பிலிருந்து ஏற்கனவே வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எப்பையும், புதிதாக தமிழ்த் தேசியக் கட்சியையும், ஜனநாயக போராளிகளையும் உள்ளீர்த்துள்ளோம் என்று ரெலோவும், புளொட்டும் தர்க்கம் செய்யலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உரிமை கோரியிருக்கின்றது.

ஆனால், அவர்கள் உண்மையில் ‘ஜனநாய தமிழ்த் தேசிய கூட்டணி’ என்ற பெயரில் குத்துவிளக்குச் சின்னத்தில் தான் போட்டியிடப்போகின்றார்கள். இந்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்பது, 2008ஆம் ஆண்டு புளொட் அமைப்பின் ஆர்.ராகவன், வரதராஜப்பெருமாள், சுகு.ஸ்ரீதரன் ஆகியோரின் கூட்டில் உருவாக்கப்பட்டு பின்னர் தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டதாகும்.

இந்தக் கூட்டணி அக்காலத்தில் உருவாக்கப்பட்டதற்கான உண்மையான நோக்கம், கூட்டமைப்புக்கு எதிர்க்கடை விரிப்பதற்காகவாகும். இருப்பினும், 2009 முள்ளிவாய்க்கால் அவலத்திற்குப் பின்னர் புளொட் கூட்டமைப்பிற்குள் உள்ளீர்க்கப்பட்டதன் காரணத்தினால் அக் கூட்டணி செயற்பாட்டிற்கு வரவில்லை என்பது தான் யதார்த்தம்.

எது, எவ்வாறாயினும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்பது போட்டியிடும் கட்சி, நாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று (கு) தர்க்க வாதம் நடத்தினால் அதற்கு ஒன்றும் செய்யமுடியாது. அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரை அத்தரப்பு பயன் படுத்த முடியாது என்று கூறவரவில்லை.

ஏனென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்ப்பட்டதொரு அரசியல் கட்டமைப்பு அல்ல. வெறுமனே தேர்தலுக்கான கூட்டு என்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள கட்டமைப்பு மட்டுமே.

ஆனால், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தை ஆனந்தசங்கரி வழங்கமறுத்ததை அடுத்து தெரிவு செய்த கட்சி இலங்கைத் தமிழரசுக்கட்சி மற்றும் அதன் சின்னமான வீடு.

அக்காலத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கூட்டமைப்பில் அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகளாக இருந்தபோதும் அவற்றின் சின்னங்களை பயன்படுத்துவதற்கு பிரபாகரன் தீர்மானித்திருக்கவில்லை.

கிடப்பில் இருந்த தமிழரசுக்கட்சியைத் தான் அவர் தூசுதட்டி வெளியில் எடுத்தார். அந்தக் கட்சியின் சின்னத்துக்காகவே தனது இயக்க உறுப்பினர்களை பிரசாரம் செய்யவைத்தார். வடக்கு, கிழக்கிலிருந்து 22நாடாளு மன்ற உறுப்பினர்களை சிறிலங்கா நாடாளுமன்றத்திற்கு அனுப்பினார்.

TNA

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் இயக்கமாக கொள்கைவழி நின்று செயற்படும் கட்டமைப்பாகவே வெளிப்படுத்தினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் 2009 மே 18 வரையில் அதேகொள்கையில் தான் பயணித்தது.

தற்போது ஜனநாயகத் தலைவர் என்று தன்னை தகவமைத்து வெளிப்படுத்திவரும் சம்பந்தன் கூட, அன்றைய காலத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் கட்டளைகள் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் ஊடாக பரிமாற்றப்படும் போது அதனையே பிரதிபலிக்கும் முகவராக செயற்பட்டார் என்பது தான் உண்மை.

ஆனால், முள்ளிவாய்க்கால் அவலங்கள் நிறைந்ததும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைமைகள் அனைத்தும் தலைகீழாக மாறின. முதலில் விடுதலைப் புலிகளால் அதிகம் நேசிக்கப்பட்ட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் திட்டமிட்டு வெளியேற்றப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் உள்ளிட்டவர்களுக்கு 2010 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆசனங்களை வழங்க முடியாது என்று சம்பந்தன் நேரடியாக கூறினார்.

அத்தோடு, கூட்டமைப்பின் கொள்கைக்கு நேரெதிராக 13ஐ ஆதரிக்கும் போக்கில் சம்பந்தன் செல்ல முற்பட்டார். இதனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது தரப்புடன் வெளியேறும் நிலைமை ஏற்பட்டது.

கஜேந்திரகுமாருக்கு பிரதியீடாக சுமந்திரன் தேசியப்பட்டியல் ஊடாக உட்கொண்டு வரப்பட்டார். அவர் வருகைக்குப்பின்னர் ஈ.பி.ஆர்.எல். உடனான மோதல்போக்கு அதிகரித்தது. இதனால் 2017இல் ஈ.பி.ஆர்.எல்.எப் வெளியேறியது. பின்னர் ரெலோ,புளொட்டுடன் தமிழரசுக்கட்சியும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அடையாளத்துடன் ‘சுருங்கிய நிலையில்’ செயற்பட்டு வந்தது.

இருப்பினும், தமிழரசுக்கட்சி, ரெலோ,புளொட் மீதும் தனது, கட்டுப்பாடுகளை விதிக்க ஆரம்பித்தது. இங்கு தான் பிரச்சினைகள் எழுந்தன. ரெலோவிற்கு இம்முறை மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் காணப்பட்டதால் புளொட்டையும் தன்னுடன் இணைத்துக்கொண்டது. தேசியப் பட்டியல் ஆசனம் தம்மால் தான் வந்தது என்ற நிலைப்பாட்டுடன் தாமும் நான்கு ஆசனங்களைக் கொண்ட தமிழரசுக்கட்சிக்கு நிகரானவர்கள் தான் என்ற வெளிப்பாட்டை காண்பித்தது.

தமிழரருசுக்கட்சியின் தனித்த ஓட்டத்துக்க முட்டுக் கட்டைகளை போாட ஆரம்பித்தன. இது, தமிழரசுக்கட்சி குடைச்சலைக் கொடுத்தது. தமிழரசுக்கட்சியால் தான் ஆயுத இயக்கங்களான ரெலோவும்,புளொட்டும் தேர்தல்களில் வெற்றிகளைப் பெறுகின்றன என்றவொரு நிலைப்பாடு தமிழரசுக்குள் உள்ளது. இவை அனைத்தும் கூட்டுக்கலவையாகி ஈற்றில் புளொட்,ரெலோவை வெளியில் விடுவோம் என்று தமிழரசுக்கட்சி தீர்மானித்தது.

அதற்காக காய்கள் நகர்த்தப்பட்டன. தமிழரசுக்கட்சியின் மத்திய குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டது. தேர்தலை தொழில்நுட்ப ரீதியாக முகங்கொடுப்பது என்ற போர்வையில் தனிதனியான சின்னங்களில் களமிறங்குவதற்கு தமிழரசுக்கட்சி முன்மொழிந்தது.

ஆனால், புளொட்டும், ரெலோவும் இணைந்து ஆழமாக சிந்தித்து, தமிழரசுக் கட்சி தான் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிவிட்டது என்ற தோற்றப்பாட்டை செவ்வனே வெளிப்படுத்தி விட்டன. இது தமிழரசுக்கட்சிக்கு தற்போது இரண்டும் கட்டா நிலைமையை ஏற்படுத்தியுள்ளன.

அதுமட்டுமன்றி, தனது இறுதி நாட்களை நகர்த்திவரும், சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவர் என்ற படிநிலையில் இருந்து மட்டுமல்ல தாயக தமிழ் மக்களின் தலைவர் என்ற நிலையிலிருந்தும் கீழ் இறக்கப்பட்டுள்ளார். சுமந்திரனும் பேச்சாளர் பதவியை இழந்திருக்கின்றார்.

இதுவொருபுறமிருக்கையில், ரெலோ,புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் ஆகிய தரப்பின் கூட்டுடன் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி இணையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதற்கான பேச்சுக்களும் முன்னெடுக்கப்பட்டன. இதற்குள் யாழ்.மாநகர சபையின் முன்னாள் மேயர் மணிவண்ணன் உள்ளிட்ட தரப்பினர்கள் விக்னேஸ்வரனின் கட்சியுடன் இணைந்து கொண்டனர். இதனை விக்னேஸ்வரன் தனக்கு பெரும் பலமாக கருதினார். தன்னுடைய கட்சியின் சின்னத்திலும், பெயரிலும் தான் போட்டியிட வேண்டும் என்றார். அப்பியில்லாது விட்டால் புதிய கூட்டணியின் செயலாளர் பதவியை தனக்கு தரவேண்டும் என்று உறுதியாக இருந்தார்.

விக்னேஸ்வரனின் இந்த நிலைப்பாடு மீண்டும் தமிழரசுக் கட்சியின் ஏதேச்சதிகாரப் போக்கின் ஒரு வெளிப்பாடாகவே இருந்தது. அதனை ஏனைய தரப்புக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் அவர் கூட்டில் இருந்து வெளியேறினார். அந்தவெளியேற்றத்துக்கு விக்னேஸ்வரனுக்கு நிதியுதவி அளிக்கும் புலம்பெயர் தரப்பின் தீர்மானங்களும் பிறிதொரு காரணம்.

அவ்வாறு வெளியேறிய, விக்னேஸ்வரன் தரப்புடன், அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகம் இணைந்து செயற்பட தீர்மனித்துள்ளது. ஆனால் விக்னேஸ்வரனின் கட்சியின் பேச்சாளரான அருந்தவபாலன் அரசியல் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியிருகின்றார்.

இவ்வாறான நிலையில், இலங்கைத் தமிழரசுக்கட்சி தனி அணியாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அடையாளத்துடன் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி பிறிதொரு அணியாகவும், தமிழ் மக்கள் கூட்டணி மற்றொரு அணியாகவும் உருவெடுத்திருக்கின்றன. இதனைவிட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் உள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசிய தளத்தில் நான்கு அணிகள் இம்முறை உருவெடுத்திருக்கின்றன. இந்த அணிகள் நான்கும் ஏட்டிக்குப்போட்டியா உள்ளூராட்சி மன்றங்களில் களமிறங்குகின்றன. தற்போதே, கதிரைச் சண்டைகளும், சச்சரவுகளும் தாரளமாக ஆரம்பித்துவிட்டன. இது தேர்தல் நடைபெற்றால் நிச்சயம் உச்சம் பெறும்.

தேர்தல் நிறைவின் பின்னர் இந்த அணிகள் உடைவுகள் ஏற்படலாம். புதிய கூட்டுக்களும் ஏற்படலாம். அவை பதவிகளையும், அதிகாரங்களையும் மட்டும் அடிப்படையாக கொண்டதாக அமையும். நிச்சயமாக கொள்கை அடிப்படையிலானதாக அமையப்போவதில்லை என்பதே நிதர்சனம்.

# இனவழிப்புக் குருதியால் நனைந்தது நம் நாட்காட்டி



தீபச்செல்வன்

நம் நாட்காட்டிகளை தட்டும் போதெல்லாம் குருதி சிந்திக் கொண்டிருக்கிறது. கால நாட்காட்டியில் நாம் கொல்லப்படாத நாட்கள் எதுவும் இருக்கிறதா என்று தேடினால் ஏமாற்றம்தான் எஞ்சுகிறது. உண்மையில் இலங்கைத் தீவில் ஒரு சிறுபான்மை இனம் எந்தளவுக்கு இனவழிப்பு செய்யப்பட்டு அழிக்கப்பட்டிருக்கிறது என்பதை நம் நாட்காட்டியின் சிவப்பு நிறம் வெளிப்படுத்தி நிற்கிறது. முள்ளிவாய்க்காலில் மாத்திரம் இனவழிப்பு நிகழ்ந்துவிடவில்லை என்பதையும் வடக்கில் மாத்திரம் முள்ளிவாய்க்கால்கள் நிகழ்த்தப்படவில்லை என்பதையும் கிழக்கு மாகாண மண்ணில் நடந்த கொக்கட்டிச் சோலைப் படுகொலை சொல்லி நிற்கிறது.

கொக்கட்டிப்படுகொலை என்று தேடல்களை செய்தால் இரண்டு படுகொலைகளைப் பற்றிய விபரங்கள் சேகரம் ஆகின்றன. ஒன்று 19987இல் நடந்த இனப்படுகொலை. மற்றையது 1991இல் நடந்த இனப்படுகொலை. ஈழத்தின் கிழக்கே மட்டக்களப்பு மாவட்டம் தனித்துவமான வாழ்க்கை பண்பாட்டையும் வரலாற்றையும் கொண்ட மண். தேன் ஒழுகும் தமிழ் புளங்கும் அம் மண்ணில் சிங்கள அரசு பல்வேறு படுகொலைகளையும் ஆக்கிரமிப்புகளையும் நிகழ்த்தியிருக்கிறது. எண்பதுகளின் துவக்கத்திலும் இறுதிப் பகுதியிலும் கிழக்கு மாகாணத்தில் முடுக்கிவிடப்பட்ட படுகொலைகளுக்குப் பின்னால் மாபெரும் அரசியல் இருக்கிறது. நேரடியாக ஸ்ரீலங்கா அரசே அப் படுகொலைகளை நடாத்தியுமிருக்கிறது.

கொக்கட்டிச்சொலை என்றதும் நம் நினைவுக்கு வருவது கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் தான். ஈழத்தின் புரதானமான தான் தோன்றீச்சரமாக விளங்கும் இக் கோவில் ஈழத்தின் சிவ ஈச்சரங்களில் ஒன்று. திருகோணமலை மண்ணில் கோணேச்சர ஆலயம் முக்கியத்துவம் பெறுகிறது. அது கிழக்கு மாகாணத்திற்கு மாத்திரமின்றி தமிழர் தேசத்திற்கே பெருமையும் ஆதாரமுமாய் அமைந்த கோவில். மட்டக்களப்பு மண்ணில் தான்தோன்றியாக உருவெடுத்த கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அந்நியப் படையெடுப்புக்களின் போது அழிக்கப்பட்டது. போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் “புல்லுண்ட கல் நந்தி” இக்கோவிலின் பெருமைகளில் ஒன்றாக இருப்பது மீண்டுமொருமுறை உயிர்த்தலின் அடையாளமதாகும்.

கொக்கட்டிச்சோலையின் இப் பெருமை முகத்தில் இனவழிப்புக் குருதியினால் கோடுகளை வரைந்தது இலங்கை அரசு. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளில் ஒன்றான கொக்கட்டிச்சோலையின் முதற் பகுதி 1987ஆம் ஆண்டில் தை 28, 29 மற்றும் 30 ஆகிய நாட்களில் நிகிழத்தப்பட்டது. ஜே.ஆரின் வழிநடத்தலில் இலங்கை அரசின் விசேட அதிரடிப்படைகள் நடத்திய கோர இனப்படுகொலை அதுவாகும். கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் உள்ள கிராமங்கே இரத்ததினால் உறைந்த அந்தப் படுகொலையில் 86 இற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 12 பேருக்கு என்ன நடந்தது என்று தெரியாமலே காணாமல் போயினர்.

கொக்கட்டிச்சோலைக் கிராமங்களை இலங்கை அரசின் விசேட படைகள் சுற்றி வளைத்திருக்க வான் வழியாகவும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மண்முனைத்துறைக்கும் மகிழடித் தீவுக்கும் இடையில் உள்ள இறால் பண்ணையில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்ளைதான் முதலில் படுகொலை செய்தனர் அதிரடிப்படையினர். அன்று இறால் பண்ணையே இரத்தப் பண்ணையாக மாறியது என்று எழுது கிறார் மணலாறு விஜயன். அந்த மக்களை கைது செய்து தமது துப்பாக்கிளால் சுட்டு வெறிதீர்த்த பின் ரயரிட்டு எரித்து தமது இனவெறியை தீர்த்துக் கொண்டனர்.

இந்தப் படுகொலை நடைபெற்று நான்கு வருடங்களின் பின்னர், ஜூன் 12ஆம் நாள் மற்றொரு படுகொலையை சந்தித்தது கொக்கட்டிச்சோலை. மரணத்தின் மேல் மரணமாக குருதியின் மேல் குருதியாக இப் படுகொலை நிகழ்த்தப்பட்டது. இப் படுகொலையின் போது 150 தமிழர்கள் கொல்லப்பட்டனர். பெண்களும் குழந்தைகளும் என அப்பாவித் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்று அழைக்கப்படுதலின் பெயரில் கொன்றழிக்கப்பட்ட குரூர நிகழ்வாக கருதப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை சந்தித்த இரண்டாவது இனவழிப்பாக கருதப்படும் இப் படுகொலையுடன் வேறு பல ஒடுக்குமுறை நிகழ்வுகளுடன் இப் பகுதியில் சுமார் ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டமையும் இம் மண்ணின் துயர வரலாறு ஆகும்.

இப்படுகொலையை செய்த ஶ்ரீலங்கா அரசு தன்னை தானே விசாரிக்கும் ஆணைக்குழு ஒன்றையும் அமைத்தது. இப் படுகொலைகளை நடத்திய இலங்கை படையினரை கட்டுப்படுத்த கட்டளை அதிகாரி தவறி விட்டதாக ஆணைக்குழுவால் கண்டறியப்பட்டதாகவும் அவரைப் பதவியில் இருந்து அகற்றுமாறு ஆணைக்குழு பரிந்துரை செய்தது. அத்துடன் படுகொலைகளில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினரில் 19 பேரை ஆணைக்குழு அடையாளம் கண்டதுடன் கொழும்பில் நடத்தப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவ விசாரணைகளில் இந்தப் 19 பேரும் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்ட போதும் பின்னர் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டமை குறித்த ஆணைக் குழுவின் உண்மை முகமாகும்.

கொக்கட்டிச்சோலைப் படுகொலையை மட்டக்களப்பில் மாத்திரமின்றி ஒட்டுமொத்த ஈழமும் சர்வதேச அளவிலும் நினைவுகூரல் நிகழ்வுகள் ஆண்டுதோறும் இடம்பெற்று வருகின்றன. இம்முமுறையும் மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை மண்டபத்தில் நினைவு நிகழ்வு இடம்பெறுகிறது. அத்துடன் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் உயிர் நீத்தவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனையும் இடம்பெறுகிறது. ஆனாலும் இந்த ஆத்மாக்களின் சாந்தி இன்னமும் அமைதி அடையாமல் இருக்கும் என்பதை நம்மால் உணர முடிகிறது.

மட்டக்களப்பு மண்ணிலிருந்து ஈழத் தமிழ் மக்களை துடைத்தெறிந்து அந்த மண்ணை அபகரிப்பதற்காகவே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஒரு அரசியல் நோக்கம் கருதிய இராணுவ நடவடிக்கையே கொக்கட்டிச் சோலைப் படுகொலை. மிகவும் நன்கு திட்டமிட்ட இன அழிப்பாக அன்றைய அரசால் தனது படை எந்திரத்தின் மூலம் நடாத்தப்பட்ட கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் ஈழத் தமிழ் மக்களின் நெஞ்சில் ஆறாத காயமாக நிலைத்துவிட்டது. இன்றைக்கு இப் படுகொலை நிகழ்த்தப்பட்டு முப்பத்தொரு வருடங்கள் கழிந்துவிட்டன. இன்றுவரையிலும் அதற்கான நீதி வழங்கப்படவில்லை. மாறாக அதற்குப் பிறகு இன்னும் பல இனப்படுகொலைகளை மட்டக்களப்பு மண்ணும் ஒட்டுமொத்த வடக்கு கிழக்கு தேசமும் முகம் கொடுத்து வந்திருக்கிறது.

எல்லாப் படுகொலைகளும் நீதியைத்தான் வலியுறுத்துகின்றது. அது கொக்கட்டிச்சோலையில் இருந்து முள்ளிவாய்க்கால் வரையிலும் நீள்கிறது. கிழக்கில் தொடங்கி வடக்கில் நீண்டு குரல் எழுகிறது. நம் நாட்காட்டியின் அத்தனை பக்கங்களும் இனவழிப்பால் பாதிக்கப்பட்ட எம் இனத்தின் எளிய மக்கள் போல நீதியின் தவிப்பை சிந்துகின்றன. சர்வதேச விசாரணை ஒன்றே காலத்திற்கு முந்தைய இப் படுகொலைகளுக்கும் முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கும் விடையளிக்கும் என்ற நம்பிக்கையில்தான் ஈழ மண்ணில் மக்கள் இன்னமும் உயிர் வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு அரசியல் நோக்கம் கருதிய இராணுவ நடவடிக் கையே கொக்கட்டிச்சோலைப் படுகொலை. மிகவும் நன்கு திட்டமிட்ட இன அழிப்பாக அன்றைய அரசால் தனது படை எந்திரத்தின் மூலம் நடாத்தப்பட்ட கொக்கட்டிச் சோலைப் படுகொலைகள் ஈழத் தமிழ் மக்களின் நெஞ்சில் ஆறாத காயமாக நிலைத்துவிட்டது. இன்றைக்கு இப் படுகொலை நிகழ்த்தப்பட்டு முப்பத்தொரு வருடங்கள் கழிந்து விட்டன. இன்றுவரையிலும் அதற்கான நீதி வழங்கப்படவில்லை. மாறாக அதற்குப் பிறகு இன்னும் பல இனப்படுகொலைகளை மட்டக்களப்பு மண்ணும் ஒட்டுமொத்த வடக்கு கிழக்கு தேசமும் முகம் கொடுத்து வந்திருக்கிறது.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 03 மலர் 31 ஜனவரி 2023 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com

# இந்தியாவின் தெளிவான செய்தி

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கான நியாயமான, நிரந்தரமான தீர்வொன்று கிடைப்பதாயின், அது, 'பிரிக்கமுடியாத, பிளவுபடுத்த இயலாத ஐக்கிய இலங்கைக்குள், இணைந்த வடக்கு, கிழக்கில் உள்ளக சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்டு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு, பகிரப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறப்படாத வகையில் தங்களைத் தாங்களே ஆளக்கூடியவாறு சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும்' என்பதே தயாகத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளில் பெரும்பான்மையானவற்றின் நிலைப்பாடாகும்.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாத்திரம் மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் தமிழர்களின் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றொரு விடத்தினை கொண்டிருக்கின்றது. அதுவொன்றும் தீண்டத்தகாத விடயம் அல்ல.

அந்தவகையில் பார்க்கின்றபோது, ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்த வட,கிழக்கில், அதிகாரப்பகிர்வுடனான சமஷ்டித் தீர்வினையே கோரிநிற்கின்றன என்பது பொதுப்படையாகின்றது.

அதேநேரம், குறித்த கட்சிகள், தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக இருந்தால் இந்தியாவினுடைய பிரசன்னம் ஏதேவொருவகையில் காணப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றன. குறிப்பாக, 1987ஆம் ஆண்டு ஜுலை 29ஆம் திகதி இந்திய, இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் தமிழர்கள் சார்பில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மறைந்த ராஜீவ் காந்தியே கையொப்பமிட்டுள்ளார். ஆகவே, இந்திய தமிழர்களின் சார்பில் கையொப்பமிட்ட இந்தியாவுக்கு தமிழர்களுக்கான நியாயமான தீர்வினை பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் 'தார்மீக கடமை' உள்ளது என்பது அந்தக் கட்சிகளின் நிலைப்பாடு.

இதே நிலைபட்டில் தான் அநேகமான தாயகத் தமிழர்களும், புலம்பெயர் தமிழர்களும் உள்ளார்கள். அத்துடன், பிராந்தியத்தில் சக்திமிக்க தரப்பாக இந்தியா இருக்கின்றது என்றும், தமிழகத்தில் இரத்த உறவுகள் வாழ்க்கின்றன என்பதும் பிறிதொரு வலுச்சேர்க்கும் வாதமும் உள்ளது.

இவ்வாறான நிலைமைகள் வலுவாக காணப்படுகின்ற சூழலில் சிறிலங்காவுக்கு இரண்டு நாள் விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர், இம்முறை வழமைக்கு மாறாக தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒருமித்து அழைத்துச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டமையும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளாமையும் தான் முக்கிய அம்சமாகும்.

அதேநேரம், குறித்த சந்திப்பின்போது, கஜேந்திரகுமார் தவிர்ந்த ஏனைய தரப்புக்கள் அரசியலமைப்பில் உள்ள அதிகாரப்பகிர்வை அரசாங்கம் முழுமையான நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா அழுத்தங்களை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன. இதனை இன்னொரு மொழியில் கூறுவதாக இருந்தால் 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைச்சாத்தியமாக்குவதற்கு அழுத்தமளிக்குமாறு கோரியுள்ளன.

இதன்போது, தான் ஏனைய தரப்புக்களின் கூற்றுக்களிலிருந்து சற்று மாறுபடுவதாகவும், ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் பயனில்லை என்றும், ஏற்கனவே ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு சம்பந்தமான விடயத்தில் 30வரையான உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கள் மத்திய அரசாங்கத்திடம் அதிகாரங்கள் குவிந்திருப்பதையே பொருள்கோடல் செய்துள்ளன என்பதையும் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சமயத்தில், 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு சிறிலங்கா அரசாங்கத்துக்கு அழுத்தங்களை பிரயோகிப்பதாகவும், அதுவே இந்தியாவின் இறுதியான நிலைப்பாடாகவும் கூறியுள்ளார் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர். ஆனால், அதுகூட வடக்கு, கிழக்கு இணைப்பற்ற காணி, பொலிஸ் அதிகாரமற்ற 13ஆவது திருத்தச்சட்ட அமுலாக்கத்தினையே அவர் மையப்படுத்தியுள்ளார்.

ஆக, 13ஆவது திருத்தச்சட்டத்தில் இயலுமானதையே நடைமுறைப்படுத்த சிறிலங்கா அரசாங்கம் முன்வரும்.அதனை முதலில் ஏற்றுக்கொள்வதே புத்திசாலித்தனமானது என்று தமிழ்த் தரப்பிற்கு இடித்துரைத்துள்ளது இந்தியா என்பதே யதார்த்தமானதாகும்.

அந்த அடிப்படையில், இந்தியா ஊடாக தீர்வுகளைப் பெறுவதற்கு முயற்சிக்கும் தரப்புக்களும், இறுக்கமாக சமஷ்டியைக் கோரும் தரப்புக்களும் அடுத்தகட்டம் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. அதேநேரம் தமிழர் தாயகம் இணைப்பின்றி 13ஐ ஏற்றுக்கொள்ளத் தயாராகும் தரப்புக்களும் தம்மை நியாயப்படுத்துவதற்கான காரணங்களை கண்டறிய தயாராக வேண்டும். இது தான் இந்தியாவின் தெளிவான செய்தி.

# ஊடகவியலாளர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறையை கண்டிக்கும் 'கறுப்பு ஜனவரி'



இலங்கை அரசால் ஊடகவிலலாளர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் மற்றும் படுகொலைகளை கண்டிக்கும் கறுப்பு ஜனவரி மட்டக்களப்பில் நினைவுகூறப்பட்டது.



கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் இம் மாதம் 27 ஆம் திகதி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள உயிரிழந்த ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபிக்கு முன்பாக குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல்.தேவதிரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் துமிந்த சம்பத் உள்ளிட்ட உறுப்பினர்கள், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், முன்னாள் கிழக்கு மாகாணசபைப் பிரதித் தவிசாளர், மாநகர சபை உறுப்பினர்கள், அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கடும் மழையையும் பொருட்படுத்தாது கறுப்பு ஜனவரி தினத்தை அனுஸ்டிக்கும் முகமாக ஊடகவியலாளர்கள் கறுப்புப் பட்டி அணிந்து அமைதியான முறையில் காந்திப் பூங்காவில் இருந்து தனியார் பஸ் நிலையம் வரை பேரணியாகச் சென்று மீண்டும் காந்திப்பூங்காவை வந்தடைந்து தூபியில் சுடரேற்றி இறந்த ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளுக்கு தமது கண்டணங்களையும் தெரிவித்தனர்.

## மறைந்த காட்டுனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து...



# ரணிலின் உருட்டு



**தேசிகன்**

75ஆவது சுதந்திரம் எதிர்வரும் நான்காம் திகதி தென்னிலங்கையால் கோலாகமாகக் கொண்டாடுவதற்கான தயார்ப்படுத்தல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு சுமார் இரண்டு மாதகால இடைவெளி இருக்கும்போதே, ராஜபக்ஷக்களின் பாதுகாப்பு அரணாக ஜனாதிபதிப் பதவியை வகித்துக்கொண்டு இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, '75ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்' என்று காலகெடுவுடன் பகிரங்கமாக அறிவிப்பையும் செய்தார்.

அத்துடன், 'வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்து அந்த மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை முன்னெடுக்கப்போகின்றேன்' என்றும் அறிவித்தார். முதலில் நாடாளுமன்றத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சர்வகட்சி மாநாட்டை நடத்தினார். பின்னர், தமிழ் மக்கள் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு மீண்டும் சர்வகட்சி மாநாட்டை நடத்துவதாக அறிவித்தார்.

அதனடிப்படையில், தமிழ் மக்களை பிரதிநிதிகளுடன் நான்கு சுற்றுப்பேச்சுக்களை முன்னெடுத்தார். இதில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தரப்பினரும் பங்கேற்கவில்லை. குறிப்பாக, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தள்ளியே இருந்தது.

அதுமட்டுமன்றி, அந்த அணி, ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தரப்புடன் இந்தப்பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான காரணங்களையும் அவ்வப்போது வெளிப்படுத்தியவாறு எச்சரிக்கை மணியையும் ஒலித்துவந்தது. விக்னேஸ்வரனை பொறுத்தவரையில் நம்பிக்கையில்லாது பேச்சுக்களில் பங்குபற்றினார். இறுதியாக நடைபெற்ற இரு பேச்சக்களிலும் பங்குபற்றுவதற்கு அவருக்கு சந்தர்ப்பங்கள் கிட்டவில்லை.

அதேநேரம், சுமந்திரன் ஊடாக, தமிழ்த் தலைவர்களை அழைக்கும் ரணிலின் முயற்சிகளுக்கும் அவர் முட்டுக்கட்டை வைத்தார். அனைத்து தமிழ்த் தலைவர்களையும் தனித் தனியாக அழைக்கும் முறைமையொன்று ஏற்படுவதற்கும் வழிவகுத்தார்.

அதேநேரம், ரெலோ, புளொட் கூட்டமைப்பின் பங்காளிகளாக இருந்தமையால், பேச்சுக்களில் சம்பந்தன், சுமந்திரன் இணையுடன் சென்றிருந்தன. எனினும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய பின்னர் நடைபெற்ற இறுதிப்பேச்சுவார்த்தையில் செல்வம் அடைக்கலநாதன் மட்டுமே பங்கேற்றிருந்தார். அவருக்கான அழைப்பு நேரடியாக ஜனாதிபதி செயலகத்திலிருந்து சென்றிருந்தது.

இவ்வாறு தமிழ்த் தரப்பின் பிச்சல்பிடுங்கல்களுக்கு மத்தியில் இறுதியாக கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின்போது, தமிழ் மக்களின் உடனடியான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை தமிழ்த் தரப்பு முன்வைத்திருந்தது.

அதாவது, வடக்கு, கிழக்கில் தமிழர்களின் நிலங்கள் படையினராலும் அரசாங்க திணைக்களங்களினாலும் சுவீகரிக்கப்படுதலை நிறுத்தல், மற்றும் விடுவித்தல், நீண்டகாலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல்போனாருக்கு உரிய தீர்வு போன்றன விரைந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்துடன், நிரந்தமரமான அரசியல் தீர்வொன்று குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்துகின்ற அதேவேளை, முதற்கட்டமாக அரசியலமைப்பில் உள்ள அதிகாரப்பகிர்வு விடயங்களை (1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை அடுத்து கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தத்தை) முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் தமிழ்த் தரப்பு நிபந்தனை விதித்தது.

இதற்கு அரசாங்கத்திடமிருந்து எவ்விதமான உறுதிப்பாடுகளும் வெளிப்படுத்தப்படாத நிலையில் தேசிய பொங்கல் நிகழ்வு தினமன்று வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளை விடுப்பது தொடர்பில் பேசுவோம் என்று மட்டும் பிரதிபலிப்புச் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் பெருமெடுப்பில் ஏற்பாடாகியிருந்த தேசிய பொங்கல் நிகழ்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

அவ்விதமான நிலையில், குறித்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில், அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை ஒரிரு வருடங்களில் கட்டங்கட்டமாக அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்தும். வடக்கில் மாத்திரமல்ல, தெற்கிலும் முதலமைச்சர்கள் அது நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று கோரினார்கள்' என்று குறிப்பிட்டார்.

அத்துடன் நிறுத்தவில்லை, தென்னாபிரிக்காவைப்போன்று உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்கப்போவதாகவும், அதற்கான முதற்கட்ட பேச்சுக்களை இராணுவத்தளபதியுடன் முன்னெடுத்தபோது அவர் அதற்கு சதகமாக பதிலளித்திருப்பதாகவும் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில்.

இந்தக் கருத்துக்களை ஜனாதிபதி ரணில் வெளியிட்டுக்கொண்டிருக்குப்போதே, யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகியோர் 'நீதி கோரி' முன்னெடுத்த போராட்டத்தின் மீது கண்ணீர்புகைக் குண்டு வீச்சும், நீர்த்தாரைப் பிரயோகமும் தாராளமாக இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

அதுமட்டுமன்றி, விசேட அதிரடிப்படை முதல் அனைத்துவகை படைகளும் களமிறக்கப்பட்டு போராட்டக்காரர்கள் மீது முழு அளவிலான படை-பல பிரயோகமும் பயன்படுத்தப்பட்டு அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரியாது நிகழ்ந்ததொன்று அல்ல.

உண்மையான ஜனநாயக தலைவர் என்றால், நல்லிணக்கம் பற்றிக் கரிசனை கொள்பவராக இருந்திருந்தால், போராட்டகளத்தில் இருந்து ஒருசில பிரதிநிதிகளையாவது அழைத்து பேச்சுக்களை நடத்தியிருக்கலாம். ஆகக்குறைந்தது, தனது உரையின்போது, போராட்டக்காரர்களை தன்னுடன் பேச்சுவார்த்தை நடத்தவாவது வாருங்கள் என்ற அழைப்பையாவது சம்பிரதாயமாக விடுத்திருக்கலாம்.

ஆனால், ரணில் அவ்வாறு செய்யவில்லை. போராட்டமொன்று நடைபெறுவதாகவே காண்பித்துக்கொள்ளாது, அதனை படைகளை வைத்து அடக்கியாளவே முயன்றிருக்கின்றார். இது அவருடைய நிறைவேற்று அதிகாரத்தின் ஏதேச்சதிகாரப் போக்கை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இதுவொருபுறமிருக்கையில், தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு அளிப்பேன் என்று காலக்கெடுவுடன் அறிவிப்பைச் செய்தவர், இப்போது ஒன்றிரண்டு வருடங்களில் 13ஆவது திருத்தச்சட்டத்தினை கட்டங்கட்டமாக நடைமுறைப்படுத்தலாம் என்று கூறியிருக்கின்றார். அதிலும், காணி,பொலிஸ் அதிகாரங்கள் பற்றி வாய்திறக்கவே இல்லை.

13ஆவது திருத்தச்சட்டம் என்பது, ஒற்றையாட்சி கட்டமைப்புக்கள் காணப்படும் ஒரு ஏற்பாடாகும். இதனை தமிழ் மக்களின் எந்தவொரு பிரதிநிதிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதேநேரம், கடந்த 36வருடங்களாக ஆட்சியில் இருந்த எந்தவொரு ஆட்சியாளர்களும் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தயாராக இருக்கவில்லை.

இவ்வாறான நிலையில், தற்போது, அரசியலமைப்பில் இருக்கின்ற ஏற்பாட்டினைச் செய்வதற்கே ஓரிரு வருடங்களை காலஅவகாசமாக கோரியிருக்கின்றார் ரணில். அதுவும், அத்திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடத்துவதாக ஒருசந்தர்ப்பத்திலும் அவர் கூறவில்லை.

மேலும், இந்தக் கூற்றுக்கூட இந்திய வெளிவிவகார அமைச்சர் சிறிலங்காவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு நான்கு நாட்கள் முன்னதாகவே கூறியிருக்கின்றார் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இதனடிப்படையில், பார்க்கின்றபோது எதிர்வரும் சுதந்திரதினத்திற்கு முன்னதாக இனப்பிரச்சனைக்கு தீர்வு என்பது ரணில் விக்கிரமசிங்கவின், பசப்புவார்த்தை.

அடுத்தபடியாக, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை நியமிக்கப்போவதாக வெளிப்படுத்தியிருக்கும் ரணிலின் கருத்தை கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது.

இந்தக் கருத்து தனியே பாதிக்கப்பட்ட மக்களை மையப்படுத்தியதாக காணப்படவில்லை. இது சர்வதேசத் தரப்புக்களையும் கவர்ந்துகொள்வதற்காக வெளிகப்படுத்தப்பட்டுள்ளவொரு கூற்றாகும்.

ஏனெனில், நெருக்கடியில் சிக்கியிருக்கும் சிறிலங்காவுக்கு மீட்சியைப் பெறுவதற்கான சர்வரோக நிவாரணியாக ரணில் கருதுவது, சர்வதேச நாணய நிதியத்தின் 2.6 பில்லின் டொலர்கள் முதற்கட்ட உதவியைத் தான். இதனையடுத்து உலகவங்கி உள்ளிட்ட ஏனைய தரப்புக்கள் உதவிகளை அளிக்கும் என்று அவர் கணக்குப்போட்டுள்ளார்.

ஆகவே, நாணயநிதியத்தின் நிபந்தனைகளில் ஒன்றாகவுள்ள நல்லிணக்கச் செயற்பாட்டை முன்னெடுப்பது ரணில் விரும்பியோ விரும்பாமலோ அவசியமான தொன்றாகின்றது. எனவே, தான் அவர் நல்லிணக்கம் பற்றி கரிசனை கொண்டிருக்கின்றார்.

2015-2019ஆண்டு வரையில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தனது முகவரான மங்கள சமரவீரவை ஜெனீவாவுக்கு அனுப்பி, கலப்பு பொறிமுறைக்கு ஆதரவினை வெளியிட்டிருந்தார். அப்போது பொறுப்புக்கூறுவதற்கும் தயராகவே இருந்ததாக வெளிப்படையாக அறிவித்திருந்தார்.

ஆனால் அவரால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எவற்றையும் முன்னெடுக்கவில்லை. காலத்தைக் கடத்தும் செயற்பாட்டை கனகச்சிதமாக முன்னெடுத்தார். அக்காலத்தில் அதிகாரங்களை தன்னகத்தே வைத்ததுக்கொண்டு பொறுப்புக்கூறலை முன்னெடுக்காதவர், தற்போது ராஜபக்ஷக்களின் கூண்டுக்குள் நின்றுகொண்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்கு உருவாக்கம் பற்றி தெரிவிக்கும் கருத்துக்களை கவனத்தில் கொள்கின்றபோது வேடிக்கையாகவே உள்ளது.

அதேநேரம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற காணி விடுவிப்புச் சம்பந்தமாக பேச்சுவார்த்தையின்போது விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள காணிகள் கூட 2019ஆம் ஆண்டு படைத்தரப்பே விடுவிப்பதாக அறிவிக்கப்பட்ட காணிகளாகும். யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் படைத்தரப்பு வசம் உள்ள ஆயிரக் கணக்கான காணிகள் விடுவிப்பு தொடர்பில் இதன்போது கருத்தாடப்படவுமில்லை. அறிவிப்புக்கள் வெளிப்படுத்தவுமில்லை.

இவற்றையெல்லாம் வைத்துப்பார்க்கின்றபோது, தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகள், தேசியப் பிரச்சினைகள், அவர்களுக்கான பொறுப்புக்கூறல்கள் ஆகியவை தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க இதயசுத்தியுடன் செயற்படவில்லை என்பது வெளிப்படையாகின்றது. அவர், அடுத்த தடவையும் ஜனாதிபதிக்கான அதிகாரத்தினை தக்கவைத்துக்கொள்வதற்கான தமிழ் மக்களின் 'தலைகளை' உருட்டவே முனைகின்றார் என்பது தான் யதார்த்தம்.

# இங்கிலாந்தில் கொண்டாடப்பட்ட தமிழ் மரபுத் திங்கள்

தமிழ் மொழியையும் தமிழர்களின் கலை கலாச்சார பண்பாடுகளையும் கொண்டாடும் விதமாக மாபெரும் தமிழ் மரபுத் திங்கள் விழா இங்கிலாந்தில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

பறை இசை முழங்க, நாதஸ்வர - தவில் இசையுடன் கோலாட்டம், சிலம்பாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் மற்றும் மயிலாட்டம் என சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்களுடன் இங்கிலாந்தின் பெரு வீதியில் தமிழர் கலைகள் கோலகலமாக ஆட்டப்பட்டு பவணியாக முதலில் திறந்தவெளி அரங்கை சென்றடைந்தது.

தமிழ் தகவல் நடுவம் (TIC) மற்றும் சமூக அபிவிருத்திக்கான மையம் (CCD) மற்றும் இணை அனுசரணையாளர்களான சரே தமிழ் கல்விக் கூடம் தழிழ் கலாசாரக் கழகம், New Malden town centre partnership, The royal borough of Kingston upon Thames ஆகியன இணைந்து Jubilee Square, New Malden எனும் இடத்தில் தமிழ் மரபுத் திங்கள் விழாவினை நடாத்தின.

இதில் பிரதம விருந்தினர்களாக பிரித்தானிய தாராளவாத ஜனநாயகக்.கட்சியின் தலைவரும் (Liberal Democrats) பாராளுமன்ற உறுப்பினருமாகிய சேர் எட் டேவி, ரிச்மண்ட் பார்க் மற்றும் நார்த் கிங்ஸ்டன் பாராளுமன்ற உறுப்பினர் சாரா ஓல்னி மற்றும் கிங்ஸ்டன் நகரபிதா கவுன்சிலர் யோகன் யோகநாதன் (Mayor of Royal Borough of Kingston Upon Themes), அவரின் பாரியார் மேயரஸ் சரோஜினி யோகநாதன், கிங்ஸ்டன் நகரசபை தலைவர் கவுன்சிலர் அன்றியஸ் கேர்ஸ்ச் (Cllr. Andreas Kirsch), கிங்ஸ்டன் கவுன்சில் நிறைவேற்று பணிப்பாளர் சாரா அயர்லாந்து (Sarah Ireland CEO) ஆகியோர் கலந்து உரையாற்றினர்.

இந்நிலையில் இங்கிலாந்தின் அதிக குளிரிலும் பெருந்திரளான புலம்பெயர் தமிழர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் ஒன்று கூடியிருந்த குறித்த திறந்தவெளி அரங்கில் தமிழ் தாய் வாழ்த்துடன் மரபுத்திங்கள் விழா ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து தமிழர் கலைகளான காவடி, கோலாட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம், கும்மிப்பாட்டு மற்றும் நடன நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டதுடன் சிறப்பு விருந்தினர்களின் உரைகளும் இடம்பெற்றன.

அதேவேளை அங்கு திரண்டிருந்த மக்களிற்கு பொங்கல் மற்றும் தமிழர் பாரம்பரிய உணவுப்பண்டங்களும் வழங்கியும் மகிழப்பட்டன.

இதனையடுத்து உள்ளக அரங்கில் தொடர்ந்த விழாவில் மேலும் பல கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. அதில் தமிழரின் உடுக்கை வாத்திய இசை மற்றும் சிறார்களின் கண்கவர் நடனங்கள் காவடி ஆட்டங்கள் பொங்கல் பாடல் ஆட்டம் மற்றும் தெருக்கூத்து என்பன இடம்பெற்றதுடன் இறுதியாக ‘தமிழ்த் தாய் இன்றும் போராடிக்கொண்டிருக்கிறாள்’ எனும் குறியீட்டு இசை வழி நாடகம் ஒன்றும் அரங்கேற்றப்பட்டது.

தமிழ் மொழியையும் அதன் கலை கலாச்சார பண்பாடுகளையும் பிரித்தானியாவிலும் கொண்டாடும் வண்ணம் கடந்த 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரித்தானிய பெரு நகர அவை ஜனவரி மாதத்தை பிரித்தானியாவில் தமிழர் பாரம்பரிய மாதமாக பிரகடணப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மேலும்உ ள்ளக அரங்கில் சிறப்பம்சமாக “இலங்கைத் தமிழர்கள் ஒரு காலவரையறையற்ற பாரம்பரியம்” (Tamils of Lanka: A Timeless Heritage) என்ற கண்காட்சி இடம்பெற்றது. தமிழர் வீரவரலாற்றையும், பண்டைய பாவனைபொருட்கள் மற்றும் இனஅழிப்பையும் காட்சிப்படுத்துவதாக இந்த கண்காட்சி அமைந்தது. இதேபோல தமிழ் பாரம்பரிய உணவுக்கண்காட்சியும் இடம்பெற்றது.



# இங்கிலாந்தில் கொண்டாடப்பட்ட தமிழ் மரபுத் திங்கள்



நமது ஈழநாடு
www.namathueelanadu.com



# ராஜபக்ஷக்களின் எதிர்காலம்(?)



**தந்திரீகன்**

தமிழினத்தின் விடுதலைப்போராட்டத்தினை 'பயங்கரவதமாகச்' சித்தரித்து, உலகச்சூழலை தமக்குச் சார்பாக பயன்படுத்தி அஸ்தமிக்கச் செய்த சாணக்கியர்களே ராஜபக்ஷக்கள்.

அண்மித்த நூற்றாண்டில் முப்படையுடன் பலம் பொருந்திய நிலையில் காணப்பட்ட ஆயுத இயக்க மொன்றை முழுமையாக அழித்தவர்கள் என்று மார்பு தட்டிக் கொண்டு கடந்தவொரு தசாப்தத்திற்கும் மேலாக வலம் வந்துகொண்டிருந்த ராஜபக்ஷக்களுக்கு இப்பொழுது மெல்லமெல்ல நெருக்கடிகள் ஏற்பட ஆரம்பித்திருக்கின்றன.

போர் வெற்றியுடன் உள்நாட்டில் கிடைத்த மக்கள் ஆணையினால், சர்வதேசத்தின் கோரிக்கைகளுக்கோ, விழுமியங்களுக்கோ மதிப்பளிக்காத போக்கில் இருந்த ராஜபக்ஷக்கள் 2015இல் ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றப்பட்டபோதும் அவை பற்றி அக்கறை காட்டியிருக்கவில்லை.

மாறாக மீண்டும் எவ்வாறு அரியாசனம் ஏறமுடியும் என்று எண்ணிச்செயற்பட்டார்களே தவிரவும், ஏற்கனவே இழைத்த தவறுகளுக்குப் பொறுப்புக்கூறுவதற்கு தயாராக இருந்திருக்க வில்லை. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்கள் பற்றி கரிசனை கொண்டிருக்கவில்லை.

ஆகக்குறைந்தது, ராஜபக்ஷக்களே உருவாக்கிய கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கூட நடைமுறைச்சாத்தியமாக்குவதற்கு விளைவிக்கவில்லை. இந்த நிலைமைகள் எல்லாம், ஈற்றில் நாட்டை வங்குரோத்துக்குள் தள்ளியது.

திரும்பியிருக்கின்றார் கோட்டாபய.

அமெரிக்காவுக்கு, ராஜபக்ஷக்களை வழிக்கு கொண்டுவர வேண்டும் என்பதில் நீண்டகாலமாகவே கரிசனைகள் இருந்து வந்தது. இதற்கு காரணம், ராஜபக்ஷக்கள் சீனாவுடன் கொண்டிருக்கும் நெருக்கம் தான். இதனால் தான், ஐ.நாவில் கூட ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தினை கிடுக்குப் பிடிக்குள் வைக்கும் தீர்மானங்களுக்கு அமெரிக்க தலைமையேற்றது.

அதுமட்டுமன்றி, 2020இல் இறுதிப்போரில் நேரடியாக தொடர்புபட்டவர்களில் ஒருவரான சிறிலங்காவின் முப்படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திரசில்வாவுக்கு எதிராக தடைகளை அறிவித்தது. 2021இல் கொமாண்டர் சந்தன ஹெற்றியாராச்சிக்கு எதிராக தடைகளை விதித்தது. கடந்த டிசெம்பரில் மேஜர் பிரபாத் புலத்வத்த மற்றும் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க ஆகியோருக்கு எதிராக தடை-களை அறிவித்திருந்தது.

இவர்கள் அனைவருமே மிலேச்சத்தனமான குற்றங்களுடன் தொடர்புபட்டவர்கள் என்பதை ஒட்டுமொத்தமான உலகமே அறியும். ஆகவே அமெரிக்காவின் தடைகளுக்கு எதிராக சிறிலங்கா அரசாங்கமோ, சிங்கள ஆயுதப்படைகளோ மௌனம் கலைத்திருக்கவில்லை. வெறுமனே புலம்பெயர் தமிழர்கள் தான் தடைகள் அறிவிப்புக்கு காரணம் என்று பகட்டுக்கதைகளைக் கூறி விட்டு தற்காத்துக்கொண்டன.

இவ்வாறான நிலையில், கனடா அரசங்கம் அமெரிக் காவை விடவும், ஒருபடி மேலே சென்றிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரியான சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க, கடற்படைப் புலனாய்வு அதி-காரியான கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி ஆகியோருக்கு எதிராக கனடா இலக்கு வைத்த தடைகளை அறிவித்திருக்கிறது.

இம்மாத்தின் இரண்டாவது வாரத்தில் கனடா இந்த அதிர்ச்சி வைத்தியத்தினை சிறிலங்காவுக்கு அளித்திருக்கின்றது. அத்துடன், ராஜபக்ஷகளுக்கு எதிராக தடைகளை அறிவித்த முதல் நாடாகவும் கனடா ஒட்டுமொத்த உலகத்திற்கும் முன்னுதாரணமாக திகழ்கின்றது.

மிருசுவில் படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டு, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டவர் தான் சுனில் ரத்நாயக்க. கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முக்கியமான சந்தேக நபராக பெயரிடப்பட்டவர் கடற்படையின் கொமாண்டர் சந்தன ஹெற்றியாராச்சி.

இவர்கள் இருவரும் மிலேச்சத்தமான படுகொலை களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றில் முன்னிறுத்தப்பட்ட போதும், தண்டனை விலக்கு கலாசாரத்தினால் இப்போது சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களை தடைசெய்வது இலகுவானதொரு விடயமாகும்.

ஆனால், ராஜபக்ஷ குடும்பத்தின் முக்கிய இருவரையும் தடைசெய்யும் தீர்மானத்தினை துணிந்து அறிவித்திருக்கின்றமை தான் ஆச்சரியமான விடயம். அதுமட்டுமன்றி, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையில் இருந்து தப்பிப்பதை கனடா தொடர்ந்து அனுமதிக்காது என்பதற்கான சமிக்ஞையாகவே இந்த தடை அறிவிக்கப்பட்டிருப்பதாக கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜொலி கூறியிருக்கிறார்.

அத்துடன், பொறுப்புக்கூறலுக்கான அழைப்பை சிறிலங்கா அரசாங்கம் நிறைவேற்றவில்லை, வாக்குறுதிகளை காப்பாற்ற வில்லை. அதாவது நம்பகமான விசாரணைகள் முன்னெடுக்கப்படாத நிலையில் தான் தடைகளை விதிப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நம்பகமான விசாரணைகளை முன்னெடுத்து, குற்றச் சாட்டுகள் பொய் என்று நிரூபிக்க கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலான காலஅவகாசம் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டது. அதனை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளாத நிலையில் தான், தடைகள் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பது தெளி-வானது.

அதுமட்டுமன்றி, இந்த அறிவிப்பின் பின்னர், குறித்தவர்கள் கனடாவுக்குள் நுழைவதற்கும், கனடாவில் சொத்துக்களை கொண்டிருந்தால் அதனை முடக்குவதற்கும், கனடாவில் உள்ளவர்கள், நிதி மற்றும் தொடர்புகளை பேணுவதற்கும் வழி சமைப்பதாகவும் கனடிய வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இந்த அறிவிப்புக்கு, கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி வரவேற்பினை வெளியிட்டுள்ளதோடு, இனப்படுகொலைக்கான நீதியைத் நிலைநாட்டும் பயணத்தில் மிகப்பெரிய விடயமாகவும் அவர் உருவகித்திருக்கின்றார்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கமானது, இந்த அறிவிப்பால் சற்றே குழமடைந்திருக்கின்றது. சிறிலங்காவுக்கான கனடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷை உடனடியாகவே அழைக்கப்பட்டார். எனினும் அவர் சிறிலங்காவுக்கு வருகை தந்து பதவிகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்பதற்குரிய நிகழ்வுகள் முற்றுப்பெற்றிருக்கவில்லை.

இதனால் அவருக்குப் பதிலாக பிரதி உயர்ஸ்தானிகர் டானியல் பூட் தான் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியை சந்தித்தார். இதன்போது, சம்பிரதாய பூர்வமாக இலக்குவைக்கப்பட்ட தடை அறிவிப்பு கண்டனம் மற்றும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், கனடியத் தரப்பில் எவ்விதமான பிரதிபலிப்புக் களும் செய்யப்பட்டிருக்கவில்லை. இதுவும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆச்சரியமான விடயம் தான். இதனால் தான் இந்தச் சந்திப்புக்குப் பின்னர் கனடாவில் உள்ள புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்தவே ராஜபக்ஷக்கள் மீதான தடை அறிவிப்பு என்ற விமர்சனத்தினை அவிழ்த்துவிட்டிருக்கின்றார்கள் அத்தரப்பினர். எனினும், அந்த விமர்சனம் ராஜபக்ஷக்களுக்கு சதகமான நிலைமை-களை ஏற்படுத்தியிருக்கவில்லை.

இந்த நிலையில் ராஜபக்ஷக்களின் அரசியல் வாரிசான நாமல் ராஜபக்ஷ, கனடா அரசாங்கம் தடை-களை அறிவிக்கும் தீர்மானத்திற்கு முன்னதாக தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் 'சிறுவர் போராளிகள் பற்றியும் ஆராய வேண்டும்' என்றொரு டுவிட்டர் பதிவினை இட்டிருக்கின்றார். ஆனால், அந்தப்பதிவுக்கு, சரணடைந்தவர்களை என்ன செய்தீர்கள் என்றெல்லாம் பிரதிபலிப்புக்கள் எழுந்தவுடன் அவரும் அடக்கிவாசிக்க ஆரம்பித்துவிட்டார்.

ஜெனிவாவில் 51/1 தீர்மானம் கொண்டு வரப்பட்ட போதே, கனடாவும் பிரித்தானியாவும், கடுமையான தடை-களை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது கனடா தடைகளை அறிவிக்கும் படிநிலையில் இறங்கியுள்ளது.

இதனையடுத்து, கனடாவுடன் கூட்டிணைந்து செயற படும் அமெரிக்காவும் ராஜபக்ஷக்கள் மீது கைவைக்க லாம் என்பதை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். அதன் நீட்சியாக பிரித்தானியாவும் பின்னடிக்காது நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம். இவ்வகையான செயற்பாடுகள் தொடர்ந்தால் ராஜபக்ஷக்களின் எதிர்காலம் நிச்சியமாக கேள்விக்குறியாகவே மாறும். அரசியல் அரங்கிலிருந்து முற்றாக அக்குடும்பம் நிச்சயம் ஒதுங்கும் நிலையேற்படும்.

வயிற்றுப்பசிக்காக,தென்னிலங்கை வீதிக்கிறங்கியது. முடிவு, சிங்கள,பௌத்த பேரினவாதத்தின் மீது கட்டி யெழுப்பப்பட்ட ராஜபக்ஷக்களின் ஆட்சி வெறும் இரண்டரை ஆண்டுகளில் முடிவுக்க வந்தது.

ஆனால், இன்னமும் ராஜபக்ஷ குடும்பம் நாடாளுமன்ற அதிகாரத்தினையும், அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் போக்கையும் கொண்டுதான் இருக்கின்றது. ஏதேவொரு வகையில், மீண்டும் ஆட்சியைப் பெற்றுக்கொண்டு விட முடியும் என்ற நோக்கத்தில் தான் ராஜபக்ஷக்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றார்கள்.

தற்போதைக்கு ராஜபக்ஷக்களால் நேரடியான அரசியல் அரங்குச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது விட்டாலும், திரைமறைவில் இருந்து காய்களை நகர்த்து கின்றார்கள். அதுமட்டுமன்றி, சிறிலங்காவில் பொருளா-தார நெருக்கடிகள், அதனால் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகள் என்பனவற்றுக்கெல்லாம் அப்பால் ராஜபக்ஷக்கள் விடுமுறை செல்கின்றார்கள். கொண்டாடங்களில் ஈடுபடுகின்றார்கள். தமது வழமையான பணிகளை முன்னெடுக்கின்றார்கள். ஆகவே, நாடு, மக்கள் என்பனவற்றையெல்லாம் கடந்து ராஜபக்ஷக்களுக்கு பிரதானமாக இருப்பது அவர்களுடைய பாதுகாப்பும், எதிர்காலமும் தான் என்பது மிகத்தெளிவாகிறது.

இந்நிலையில், அவ்விதமான மனோநிலையில் உள்ள ராஜபக்ஷ குடும்பத்தின் எதிர்காலம் பற்றிய கேள்வி இப்போது வலுத்திருக்கின்றது. அதிகாரத்துக்காக அமெரிக்க குடியுரிமையை இழந்த கோட்டாபய ராஜபக்ஷ இப்போது மீண்டும் அமெரிக்க குடியுரிமையைப் பெறுவதற்கான முயற்சிகளை எடுத்தபோது அது ஆரம்பத்திலேயே தடுக்கப் பட்டிருக்கின்றது.

எதிர்காலத்திலும், அதற்கான வாய்ப்புக்கள் காணப்படுமா என்பது கூடக் கேள்விக்குறியாகியுள்ளது. இவ்வாறான நிலையில் தான் தனது புதுவருடன் டுபாய்வரை சென்று ஒய்வுநாட்களை கழித்து விட்டு மீண்டும் சிறிலங்கா

# ரணிலின் நரித் தந்திரம் ஆட்டம் போடத் துவங்கியுள்ளது

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் கருத்து






கொள்கை இல்லாதவர்கள் துண்டு துண்டாய் உடைந்து போவதில் ஆச்சரியம் இல்லை என்று தெரிவித்துள்ள தமிழ் தேசிய ஆய்வு அமையம் ரணிலின் நரித் தந்திரம் ஆட்டம் போடத் துவங்கியுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் நமது ஈழ நாடு பத்திரிகையின் ஆய்வு அமையம் கூறியதாவது:

### ரணில் எனும் நரி

“தமிழீழ அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களால் நரி என்று அழைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் உள்ள வேளையில் எல்லாம் தமிழர் தரப்பை பலவீனப்படுத்துவதில் மிகவும் அக்கறை கொண்டு செயற்படுவார். தற்போது ஸ்ரீலங்காவை பொருளாதார நெருக்கடியில் இருந்து பாதுகாப்பதைவிட தமிழர் தரப்பை பலவீனப்படுத்துவதில் கடும் முனைப்பு காட்டுகின்றார்.

இந்த நிலையில் தாம் ஸ்ரீலங்கா அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாகவும் இலங்கை இனப்பிரச்சினைக்கு தமிழர்களுக்கு தீர்வு வழங்கப் போவதாகவும் எதிர்வரும் ஸ்ரீலங்கா சுதந்திர தினத்திற்கு முன்பாக தீர்வை வழங்க உள்ளதாகவும் ரணில் தெரிவித்துள்ளார். அத்துடன் தமிழர்களின் பிரச்சினையை தீர்த்தே தீருவேன் என்று ரணில் கூறுவதன் வெளிப்படையான அர்த்தத்தை நாம் அவதானிக்க வேண்டும்.

### உடையும் தலைமைகள்

தமிழீழத் தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் பெரும் ஆதரவை வழங்கி இருந்தனர். முதன் முதலில் 2004 பாராளுமன்றத் தேர்தலில் 24 பாராளுமன்ற உறுப்பினர்களை அனுப்பி வரலாற்று சாதனை அல்லது திருப்பம் நிகழ்த்தப்பட்ட நிலையில் இன்று கூட்டமைப்பு கொலை செய்யப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

2009 முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் தேசிய கொள்கை நீக்கம் செய்து கொண்ட நிலையில் கட்சி உடைவுகள் ஏற்படத் தொடங்கின. ஒவ்வொரு தேர்தலிலும் உடைந்து சென்ற கூட்டமைப்பு தற்போது முற்று முழுதாக உடைந்த நிலையை அடைந்துள்ளது. ஒவ்வொரு தரப்பும் தம்மை தாம் நியாயம் செய்து கொள்ளுகின்ற போதும் மக்களின் நியாயத்தை புரிய கூட்டமைப்பினராக இருந்தவர்கள் தயாரில்லை என்பதே கவனிக்கவும் கவலைக்கும் உரியதாகும்.

### நரியின் திட்டம்தான் என்ன?

ஸ்ரீலங்கா அரசு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது. இதிலிருந்து மீள்வதற்கு பல வகையிலும் ஸ்ரீலங்கா அரசு போராடிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் ஸ்ரீலங்காவுக்கு உதவுவதாக இருந்தால் ஸ்ரீலங்காவில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். ஸ்ரீலங்காவில் இன முரண்பாடு உள்ளவரையில் சர்வதேச நாடுகளின் அனுசரணையும் உதவிகளும் கிடைக்காது.

இந்த நிலையில் நரி எனப்படும் ரணில் தமிழர்களுக்கு தீர்வை வழங்கப் போவதாக சொல்லியுள்ளார். இவ்வாறு கூறினால் ஸ்ரீலங்கா அரசு நல்லிணக்கம் ஏற்படுத்த முயற்சி செய்கின்றது என நம்பி சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன கடன்களையும் சலுகைகளையும் ஸ்ரீலங்காவுக்கு தரும் என்று ரணில் நம்புகிறார். இதற்காகவே சர்வகட்சிக் கூட்டத்தை நடாத்தி தமிழர்களுக்கு தீர்வு தருகிறேன் என்று ரணில் நரிப் பணியில் காய்களை நகர்த்தியுள்ளார்.

### ஒரு கல்லில் இரு மாங்காய்

இதன் ஊடாக ஸ்ரீலங்காவுக்கு பொருளதார நன்மைகள் கிடைக்கும் என்றும் அதிபர் ரணில் விக்கிரமசிங்க நம்புகின்றார். அந்த வகையில் தமிழர்களின் ஆதரவு தனக்கு உள்ளது என்றும் நாட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது என்றும் ஒரு தோற்றக் காட்சியை காண்பித்து பொருளாதார நலன்களை அடைந்து ஸ்ரீலங்காவை நெருக்கடி நிலையில் இருந்து மீட்பதே ரணில் எனும் நரி வீழ்த்த நினைக்கும் முதல் மாங்காய் ஆகும்.

அத்துடன் லங்கா அரசுக்கு இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றம் குறித்த குற்றச்சாட்டு பன்னாட்டு அரங்கில் உள்ளது. பொறுப்புக் கூற வேண்டும் என்பதை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அழுத்தமாக வலியுறுத்தி வருகின்றார். அத்துடன் வடக்கு கிழக்கில் ஈழத் தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கான நீதிக்காக சர்வதேசத்தை நோக்கி தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்த நிலையில் தீர்வு வழங்கிவிட்டால் பன்னாட்டு அரங்கில் இனப்படுகொலையாளிகளை காப்பாற்றிவிடலாம் என்றும் ரணில் என்ற நரி இரண்டாவது மாங்காயை வீழ்த்த நினைக்கின்றது.

### மூன்றாவது மாங்காய்

2002இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ நிலையில் பெரும் பலம் பெற்றிருந்த நிலையில் சமாதான வழி மூலம் தீர்வு காண ஒரு நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தும் விதமாக ஸ்ரீலங்கா அரசை சமாதான பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர். ஆனால் அந்த வாய்ப்பை பயன்படுத்திய ரணில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் கருணாவைப் பிரித்து சூழ்ச்சி செய்தார்.

கடந்த காலத்தில் 2015இல் ஆட்சிக்கு வந்த ரணில் தமிழர்களுக்கு தீர்வு தருவேன் என்று சொல்லிக் கொண்டு தமிழ் தலைமைகளின் ஆதரவைப் பெற்று மகிந்த ராஜபக்சவையும் கோத்தபாய ராஜபக்சவையும் இனப்படுகொலைக் குற்றத்தில் இருந்து பாதுகாத்து, தமிழ் தலைமைகளை பலவீனப்படுத்தி பிரிந்து செல்லும் நிலைமைகளை உருவாக்கினார். இதேபோன்றே தற்போதும் தமிழர்களுக்கு தீர்வு தரப் போவதாக சொல்லிக் கொண்டு தமிழ் தலைமைகளின் இறுதிக் கூட்டையும் தகர்த்துள்ளார். இதுவே ரணில் நினைத்து வீழ்த்தி முடித்த மூன்றாவது மாங்காய் ஆகும்.

### தேவை புதிய தலைமை

எனினும் கொள்கை உள்ளவர்கள் உடைந்து செல்ல மாட்டார்கள் என்பதை நாம் அறிவோம். கொள்கையற்ற கூட்டமைப்பு உடைந்தாலும் ஒட்டினாலும் ஒன்றுதான். தமிழ் தேசிய அரசியலில் இளைஞர்களையும் சிறந்த சிந்தனை உள்ளவர்களையும் உள்ளடக்கி புதிய தலைமையை உருவாக்க வேண்டிய காலம் இதுவாகும். கடந்த தேர்தலில் கூட்டமைப்பு மக்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் இந்த தேர்தலில் இன்னும் நிராகரிப்பு நிகழும்.

எனவே தமிழ் மக்கள் இந்த தேர்தலில் தமிழ் தலைமைகளுக்கு பெரும் பாடத்தை கற்றுக் கொடுப்பார்கள். இனப்படுகொலைக்கான நீதி மற்றும் சுயநிர்ணய ஆட்சிக்கான ஆணையை தமிழ் மக்கள் வழங்கியுள்ள நிலையில் அதனை மறந்து கட்சி அரசியலுக்காகவும் தனிநபர் அதிகாரத்திற்காகவும் செயல்படும் கட்சிகளுக்கு மக்கள் சிறந்த பாடத்தை வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்” என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டினியில் மக்கள் இருக்க ஆங்கில மொழி பராமரிப்பு நிலையம் அவசியம்தானா!

தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து இரு நூறு ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு நடத்தப்படும் தொடர் வேலைத்திட்டங்களுடன் இணைந்து தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காக பல விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது, அதில் ஒரு வேலைத்திட்டமே ஆங்கிலமொழி மூல பராமரிப்பு நிலைய வேலைத்திட்டம், எனினும் மேற்கூறிய தோட்டத் தொழிலாளர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எந்த அரசாங்கமும் இதுவரை அறிவிக்கவில்லை என்பதே கசக்கும் உண்மை.

-ச.பார்த்தீபன்-

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள வேளையில் எந்தவொரு நிவாரணமும் கிடைக்காத தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களை வரவு செலவுத் திட்டம் (2023ஆம் ஆண்டுக்கானது) மேலும் பட்டினியில் ஆழ்த்தியுள்ளதாக மலையக மக்களின் உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் தொடர்ந்தும் குற்றம் சுமத்தி வருகின்ற நிலையில், பெருந்தோட்ட மக்களுக்காக ஆங்கில மொழியில் பகல்நேர பராமரிப்பு நிலையங்களை ஆரம்பிக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வருகைத்தந்து இருநூறு வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு நடத்தப்படும் வேலைத்திட்டங்களின் ஒரு அங்கமாக ஆங்கில மொழிமூல பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் நலன் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பணிப்புரை விடுத்துள்ளார். அதன் பிரகாரம் இந்த ஆங்கில வழி பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்படுமென தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடளாவிய ரீதியில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான ஆங்கில வழி பகல்நேர பராமரிப்பு நிலையங்களை ஆரம்பிக்கும் விசேட செயற்திட்டத்தின் முன்னோடி செயற்திட்டங்கள் ஜனவரி மாதத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும், அதனை பெருந்தோட்ட மக்களுக்காக விரிவுபடுத்த திட்டமிடப் பட்டுள்ளதாகவும் அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வறியவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் தோட்டப்புறங்களிலேயே வாழ்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் வறுமையில் வாடும் சனத்தொகையில் 51 வீதமானோர் பெருந்தோட்டத் தொழிலாளர்களே என இலங்கையில் உணவு நெருக்கடி குறித்த குடும்ப மட்டத்திலான ஆய்வுகள் உறுதிப்படுத்தியதாக நவீன அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகாடோ கூறியிருந்தார். இலங்கையின் உணவு நெருக்கடி குறித்த, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் உலக உணவு அமைப்பின் கூட்டு விசேட அறிக்கை, உலக உணவு அமைப்பின் கண்காணிப்பு அறிக்கை, இலங்கை மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் நவீன அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகாடோ மனித உரிமைகள் பேரவைக்கு முன்வைத்த அறிக்கை உட்பட நான்கு சர்வதேச நிறுவனங்கள் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் கடினமான சூழ்நிலையை எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறான ஒரு சூழலில், பெருந்தோட்ட மக்கள் தற்போது வசிக்கும் வசதி குறைந்த வீடுகளை வகைப்படுத்தி புள்ளி விபரங்களை 2022 நவம்பர் 30 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைத்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் வேலுசாமி இராதாகிருஸ்ணன், தோட்ட மக்களுக்கு தேவையான வீடுகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்தை அண்மித்துள்ளதாக தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணனின் கூற்றுக்கு அமைய, தோட்டத் தொழிலாளர்களுக்கு 36,158 கழிவறைகள் தேவைப்படுகின்றன. அது மாத்திரமன்றி பலத் தோட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டு அது காடுகளாக மாறியுள்ளன. தீ விபத்துக்களால் தமது வாழிடங்களை இழந்த பல குடும்பங்கள் இன்னமும் தற்காலிக கொட்டில்களில் வாழ்கின்றனர்.

நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு தோட்டத் தொழிலாளர்கள் பல வருடங்களாக மேற்கொண்டு வரும் போராட்டத்துக்கு இதுவரை நியாயம் கிடைக்கவில்லை. இதுத் தொடர்பில் மலையகத் தலைவர்களுக்கு எவ்வித அக்கறையும் இல்லை. அரசாங்கத்திற்கும் எவ்வித கரிசனையும் இல்லை.

பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் செய்கைப் பண்ணப்படாத தரிசு நிலங்களை அந்த மக்களுக்கே விவசாய நடவடிக்கைகளுக்காக பிரித்துக்கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாகவே விடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான ஒரு நிலைமையில் நாட்டின் பொருளாதார மற்றும் உணவு நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் நாட்டில் விவசாயம் செய்யக்கூடிய அனைத்து பிரதேசங்களிலும் உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டுமென தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்த அரசாங்கமே அறிவித்தது. இந்த சூழ்நிலையில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் செய்கைப் பண்ணப்படாத தரிசு நிலங்களை அந்த மக்களுக்கு பிரித்துக் கொடுப்பது குறித்து மீண்டும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார். அப்போதைய பிரதமர் ரணில் அதற்கு தலையசைத்தார் ஆனால் அவர் ஜனாதிபதியான பின்னரும் எதுவும் இடம்பெறவில்லை. மாறாக ஏற்கனவே விவசாயத்தில் ஈடுபட்டிருந்த பலரது காணிகளை தோட்ட முகாமைத்துவம் பிடுங்கிய சம்பவங்களே பதிவாகின.

வாழ்வதற்கு போதுமான ஊதியம் கிடைக்காமை, தங்குமிடமின்மை, சுகாதார வசதிகள் இல்லாமை ஆகியவற்றுடன் தோட்டத் தொழிலாளர்கள் குளவி, சிறுத்தை, பாம்பு போன்ற வனவிலங்குகளால் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். இது இவ்வாறிருக்க, தற்போது ஒரு இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரம் தோட்டத் தொழிலாளர்கள் லயின் அறைகளில் அடைபட்டுள்ளதாகவும், அவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட முப்பத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளின் உரிமை இன்னும் அவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை எனவும் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பெரியசாமி முத்துலிங்கம் தெரிவிக்கின்றார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களை இந்த நாட்டுக்கு அழைத்து வந்து 200 ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையிலும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்த அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மலையக மக்களைக் காக்கும் இயக்கத்தின் ஆலோசகர் அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஊடக அறிக்கை ஒன்றின் ஊடாக சுட்டிக்காட்டியிருந்தார்.

தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து இரு நூறு ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு நடத்தப்படும் தொடர் வேலைத்திட்டங்களுடன் இணைந்து தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காக பல விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது, அதில் ஒரு வேலைத்திட்டமே ஆங்கிலமொழி மூல பராமரிப்பு நிலைய வேலைத்திட்டம், எனினும் மேற்கூறிய தோட்டத் தொழிலாளர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எந்த அரசாங்கமும் இதுவரை அறிவிக்கவில்லை என்பதே கசக்கும் உண்மை.

நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு தோட்டத் தொழிலாளர்கள் பல வருடங்களாக மேற்கொண்டு வரும் போராட்டத்துக்கு இதுவரை நியாயம் கிடைக்கவில்லை. இதுத் தொடர்பில் மலை யகத் தலைவர்களுக்கு எவ்வித அக்கறை யும் இல்லை. அரசாங்கத்திற்கும் எவ்வித கரிசனையும் இல்லை.

இலங்கையின் வறியவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் தோட்டப்புறங்களிலேயே வாழ்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் வறுமையில் வாடும் சனத்தொகையில் 51 வீதமானோர் பெருந்தோட்டத் தொழிலாளர்களே என இலங்கையில் உணவு நெருக்கடி குறித்த குடும்ப மட்டத்திலான ஆய்வுகள் உறுதிப் படுத்தியதாக நவீன அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகாடோ கூறியிருந்தார்.



# யாரிடம் அதிகாரம்?



**தமிழ்நாட்டை, தமிழகமாக மாற்றும் ஆளுநர் ஆர்.என்.ரவியின் முயற்சிகள் வெற்றியளிக்குமா? இல்லை தி.மு.க.அதனை தடுத்த நிறுத்தி, ஆளுநர் பதவியிலிருந்து அவரை அகற்றுமா? என்பதே பிரதான கேள்வி!**



**பூலோகன்**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் குறித்துரைக்கப்படாத சமஷ்டி அம்சங்களைக் கொண்டிருப்பதாக சட்ட ஆய்வாளர்கள் பலரும் அடித்துரைப்பார்கள்.

ஆனால், மத்திய அரசாங்கத்திற்கும், பிராந்திய அரசாங்கத்திற்கும் நீடித்துவருகின்ற, வந்திருந்த 'அதிகாரங்கள்' தொடர்பான பிரச்சினைகள் இப்போது உச்சநிலையை அடைந்திருக்கின்றது.

இதன்காரணமாக, தற்போதைய ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக ஆளும் அரசியல் கட்சியான தி.மு.க. மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழகமே திரண்டெழுந்து தமது எதிர்ப்புக்களை காண்பித்துக்கொண்டிருக்கின்றன.

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி. கடந்த 2021ஆம் ஆண்டின் செப்டெம்பர் 10ஆம் திகதி முதல் தமிழ் நாட்டின் ஆளுராக செயற்படுவதற்காக மத்திய அரசாங்கத்தின் பூரண ஆசீர்வாதத்துடன் பதவியை பெற்றுக்கொண்டு செயற்படுகின்றார்.

ஆளுநர் ரவி, பதவியை ஏற்றகாலத்திலிருந்து பங்கு பற்றிவரும் பொதுநிகழ்வுகளில் தர்மம் பற்றி அளவுக்கு அதிகமாக தெளிவு படுத்தல்களை மேற்கொள்ள ஆரம்பித்தார். திருக்குறள் பற்றியும், திராவிட பண்புகள் பற்றியும் விமர்சனங்களை மெல்லமெல்ல வெளிப்படுத்த தொடங்கினார்.

ஏறக்குறைய, பா.ஜ.க.வின் இந்துத்துவா கொள்கையை பரப்பும் தமிழ் நாட்டு முகவர்போன்று செயற்பட ஆரம்பித்தார். விமர்சனங்களுக்கு அஞ்சவில்லை. மத்திய அரசின் அதிகாரி நான் என்ற அகங்காரமும் அவருக்கு அதிகமாகவே இருந்தது.

இதன்விளைவாக, ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழகத்தில் நிறைவேற்றப்பட்ட 20 சட்டமூலங்களை அனுமதி அளித்து டெல்லிக்கு அனுப்பாமல் கிடப்பில் போட்டு உள்ளார். முக்கியமாக பல்கலைக்கழகங்களில் முதல்வரை வேந்தராக நியமிக்கும் சட்டமூலத்தினை ஆளுநர் ஆர்.என். ரவி டெல்லிக்கு அனுப்பாமல் கிடப்பில் போட்டுள்ளார். இதனை விட ஏற்கனவே இருந்த ஆளுநர்களுடன் சேர்ந்து சில சட்டமூலங்களை வருடமொன்றைக் கடந்தும் கிடப்பில் போடும் பணியை இவரும் பின்பற்றி வருகின்றார்.

இந்த நிலையில், ஆளுநர் மீது ஆரம்பத்தில் தி.மு.க.வினர் மட்டுமே குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். மத ரீதியாக ஆளுநர் ரவி தொடர்ந்து பேசி வருகிறார். மத ரீதியாக கடுமையான கருத்துக்களை அவர் பேசி வருகிறார். ஆளுநர் என்பவர் நடுநிலையாக செயற்பட வேண்டும். அரசியலமைப்பு ரீதியாக அதை பின்பற்றி செயல்பட வேண்டும். அப்படி இருக்கும் போது அவர் சானதானம் பற்றி பேச கூடாது.

அதேபோல் இந்தியா இந்து நாடு என்று பேச கூடாது. மதம் பற்றி அவர் கருத்து தெரிவிக்கவே கூடாது. பா.ஜ.க.வின் கொள்கை பரப்பு செயலாளர் போல அவர் செயல்பட கூடாது என்பதுதான் திமுகவினர் ஆளுநருக்கு எதிராக வைக்கும் முக்கிய குற்றச்சாட்டு. இதனால் ஆளுநர் ஆர்.என்.ரவியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தலானார்கள்.

ஆனால், மத்திய அரசாங்கம் அதனைக்கண்டு கொண்டதாக இல்லை. மாறாக, தமிழகத்தில் உள்ள பா.ஜ.க.தலைவர்கள் ஆளுநருக்காக வரிந்து கட்டிக்கொண்டு பதில் விமர்சனங்களை தி.மு.க.மீது வாரியிறைப்பதற்கு தயங்கவில்லை.

இதற்கிடையில், தமிழ்நாட்டை, 'தமிழ்நாடு' என்று அழைக்க முடியாது என்றும் அது பிரிவினையை ஊக்குவிப்பதாகவும், தமிழகம் என்று தான் அழைக்க முடியும் என்றும் அது தான் பாரத தேசத்துக்குள் அப்பகுதியும் உள்வாங்கப்படுவதை உறுதி செய்கின்றது என்றும் ஆளுநர் ரவி புதிய கண்டுபிடிப்பொன்றைச் செய்தார். இது ஒட்டுமொத்த தமிழ் நாட்டையும் கடுமையாக கொதிப்படையச் செய்தது.

அப்படியிருந்தும், ஆளுநர் ரவி தமிழகம் என்றால் ஒரு பிராந்தியம். தமிழ்நாடு என்று கூறுகையில், அதற்குள் நாடு வருகிறதே. அந்தப் பயம் தான் அவ்வாறு கூறுவதற்கு காரணம் என்று பதிலுரைத்தார். இந்தியா என்றால் அகன்ற பாரதம். ஆனால், தமிழகத்தின் அரசியல்வாதிகள் தமது பிராந்தியத்தை தனித்துப்பார்க்கிறார்கள் என்று தான் அடிக்கடி கூறிவந்தமையையும் நியாயப்படுத்தினார்.

தமிழகத்தை இந்தியாவில் இருந்து பிரித்துப் பார்ப்பதையே தமிழக அரசியல்வாதிகள் இதுவரை காலமும் செய்து வந்தார்கள் என்றும் குற்றம் சாட்டினார். ஆனால், இந்தியாவின் தேசிய அரசியலில் தமிழும், தமிழ் மக்களும் புறக்கணிக்கப்பட்டதால் தமிழர்கள் தமது உரிமைக்காக போராடினார்கள் என்பதையெல்லாம் ஆளுநர் பொருட்டாக கொள்ளவில்லை.

1917ஆம் ஆண்டு தமிழர்களுக்கு சுயகௌரவம் வேண்டும் என்ற போராட்டம் ஆரம்பமாகி தற்போது அதுவெள்வேறு வடிவில் நின்றாலும், அப்போராட்டங்கள் எவையும் அகன்ற பாரத்திற்கு எதிரானது அல்ல என்பதை ஆளுநர் புரிந்து கொள்ளவில்லை. இந்திய சமூகக் கட்டமைப்பில், இந்துத்துவ கொள்கைகளின் அடிப்படையில் பார்ப்பன சிந்தனையை உச்சத்தில் வைத்து, சாதியின் பிடிகளை, பிரிவினைகளை ஏற்படுத்துவதற்கு எதிரானதாகும் என்பதையும் ஆளுநர் உணர்ந்து கொள்ளவில்லை.

நீதிக்கட்சியின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட பார்ப்பன எதிர்ப்புப் போராட்டமே பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திற்கு வித்திட்டது. சமநீதியான சமூகத்தைக் கோரி நின்றது. இந்தித் திணிப்பை ஆட்சேபித்தது. தமிழகத்தின் கலாசார அடையாளங்களை வலியுறுத்தியது. சமத்துவமும், சமநீதியும் நிலவும் மதச்சார்பற்ற இந்தியா என்பது, இந்தியாவின் அரசியல் யாப்பை வரைந்த டாக்டர் அம்பேத்காரின் கனவாக இருந்ததாயின், தமிழ் மக்களின் உரிமைகளுக்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டம், ஐக்கிய இந்தியா என்ற சிந்தனைக்கு எந்தவகையிலும் முரண்படாததாக இருக்கவில்லை என்பதையும் ஆளுநர் தெளிவாக அறிந்துகொள்வில்லை.

அறிஞர் அண்ணா பிரிவினைக் கொள்கையுடன் திராவிட முன்னேற்றக்கழகத்தை தொடங்கியது உண்மையாக இருந்தாலும் சீனாவின் ஆக்கிரமிப்பு பாரதத்திற்கு அச்சுறுத்தலாக மாறிய சந்தர்ப்பத்தில், தனியொரு தமிழ்நாடு என்ற கோரிக்கையை தி.மு.க. கைவிட்டமையும் குறிப்பிடத்தக்க விடயம் என்பதையும் ஆளுநர் அறிந்து கொண்டிருப்பாரா என்பதும் வெளிப்படையாக தெரியாதவொரு விடயம்.

இவ்வாறான நிலையில் தான் இந்த ஆண்டில் தமிழக சட்டசபையின் புத்தாண்டுக்குரிய முதல்நாள் அமர்வில் தான் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கும் தமிழ்நாட்டு முதல்வருக்கும், தமிழ்நாட்டு சட்டமன்றத்துக்கும் இடையில் பிரச்சினையொன்று பூதாகரமானது. தமிழ்நாட்டு சட்டசபையின் முதல்நாள் அமர்வில், அங்கத்தவர்களின் ஒப்புதல் பெற்ற செய்தியை ஆளுநர் வாசிக்கும் மரபொன்று உள்ளது.

அந்த அடிப்படையில், ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு உரையொன்று எழுதிக்கொடுக்கப்பட்டது. அதனை அவர் வாசித்தார். ஆனால், முழுமையாக வாசிக்கவில்லை. தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கார், பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் பற்றி குறிப்பிடப்பட்ட பந்தியை தவிர்த்தார்.

இந்தப் பெரியார்களது கொள்கைகள், கோட்பாடுகளைப் பின்பற்றி, 'திராவிட ஆட்சி நிர்வாக முறை'க்கு அமைய மாநில அரசு ஆட்சி செய்கிறது என்பது ஆளுரால் திட்டமிட்டு தவிர்க்கப்பட்டது. ஆனால் சட்ட சபையில் மக்கள் ஆணை பெற்ற திராவிட வாரிசு இருக்கின்றது என்பதை ஆளுநர் மறந்திருக்கலாம். அந்த வாரிசு சும்மாயிருக்கவில்லை. ஆளுநரின் உரைக்குள்ளே குறுக்கீடு செய்து எழுந்து நின்றது. வெடுக்காக, தனது கருத்தை முன்வைத்தது. 'தமது அரசால் வரையப்பட்ட உரையின் பகுதிகளை ஆளுநர் ஏன் தவிர்க்க வேண்டும் என்று கேள்வி எழுப்பியது. வாசித்ததை அன்றி, அவருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டதையே சட்டசபை அங்கீகரிக்கும் என்றும் குறிப்பிட்டது.

ஆம், அந்த வாரிசு தான் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். ஸ்டாலினின் வாதத்தையடுத்து, தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தும் வகையில் ஆளுநர் சட்டசபையில் இருந்து வெளிநடப்புச் செய்தார். தனது மாளிக்கைக்குச் சென்றார். அங்கிருந்து சட்டசபை விடயங்களை அவதானித்தார்.

அதற்கிடையில் ஆணைபெற்ற முதலமைச்சர் சும்மாயிருக்கவில்லை. சட்டசபையில் ஆளுநரின் உரைக்கு கண்டனத்தை வெளியிடும் தீர்மானத்தினை நிறைவேற்றினார். ஆளுநருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட உரையை உள்ளீர்க்குமாறு தீர்மானம் எடுத்தார். இது ஆளுநருக்கு நிச்சயமாக சினத்தை ஏற்படுத்தியிருக்கும்.

ஆதன்வெளிப்படாக, தமிழகத்தில் என்ன ஆளுநரின் பரிவாரங்களாக பா.ஜ.க.தலைவர் அண்ணாமலை மற்றும், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது போர்க்கொடியை காண்பிக்கலாயினர்.

ஆனாலும், முதல்வர் தரப்பு தயங்கவில்லை. உடனடியாக வரைவு செய்யப்பட்டு ஆளுநரை மீளப்பெறுங்கள் என்ற வலியுறுத்தலுடன் ஜனாதிபதி திரௌபதி முர்மூவுக்கு முதலமைச்சர் ஸ்டாலினிடமிருந்து கடிதம் பறந்தது. இதனை எவரும் எதிர்பார்க்கவில்லை. இதனால் மத்திய அரசாங்கமும் அதிர்ந்துவிட்டது.


அதுமட்டுமன்றி, மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தமிழ் நாட்டின் திராவிட அரசியல் கட்சிகள் முரண்பாடான கொள்கைகளைக் கொண்ட கட்சிகளுடனும் கைகோர்ப்பது வழமை தான். எனினும், ஆளுநரின் செயற்பாடுகளால் அனைத்து தமிழ் நாட்டின் திராவிடக் கட்சிகளும் ஆளுநருக்கு எதிராக ஒரே அணியில் திரண்டிருக்கின்றன என்பது குறிப்பிட்டுக்கூற வேண்டிய விடயம்.

இதன்மூலம் தமிழ்நாடும், திராவிடமும் அரசியலையும், மண்ணையும் தாண்டிய உணர்வு என்பதை திராவிட அரசியல் கட்சிகள் பகிரங்கமாக ஆளுநருக்கும், மத்திய அரசாங்கத்திற்கும் எடுத்துரைத்துள்ளன.

அதேநேரம், கூட்டாட்சி பற்றி உலகத்திற்கு பாடம்கற்பிக்க முனையும் இந்தியா, தனது நாட்டில் அரசியலமைப்பில் உள்ள அதிகாரங்களை கட்சி அரசியலுக்காக ஆளுநர்கள் ஊடாக மீற முனைகின்றது. அதுமட்டுமன்றி, அதிகாரங்கள் யாரிடம் இருக்கின்றன என்ற கேள்வியையும் ஏற்படுத்திவிட்டது. இது அம்பேத்கரின் சட்ட அரசியலமைப்பு மீறலுக்கு எதிரான குரலுக்கு நேர் எதிரானதாகவே உள்ளது.

# தீபச்செல்வனின் 'பயங்கரவாதி' நாவலுக்கு கிளிநொச்சியில் மகத்தான வரவேற்பு





ஈழ எழுத்தாளர் தீபச்செல்வனின் பயங்கரவாதி நாவல் வெளியீடு அரங்கு நிறைந்த மக்களின் மகத்தான வரவேற்புடன் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தமிழர் திருநாளாம் தைப் பொங்கலன்று கரைச்சிப் பிரதேச சபையின் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ் பல்பலைக்கழக ஊடகத்துறை பேராசிரியர் கலாநிதி சி. ரகுராம் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் முதல் பிரதியை நிகழ்வின் பிரதம விருந்தினரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் வெளியிட, கிளிநொச்சி இளையோரின் எதிர்காலம் இன்றே அமைப்பின் தலைவர் திரு கணபதிப்பிள்ளை ஆனந்தவடிவேல் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை முதன்மைப் பிரதியை பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வழங்கி வைக்க விடுதலைப் புலிகளின் மூத்த போராளி பசீர் காக்கா எனப்படும் மு. மனோகரன் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் முன்னாள் வட மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா வாழ்த்துரை வழங்க, எழுத்தாளர் போராளி வெற்றிச் செல்வியும் யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் தி. செல்வமனோகரனும் வழங்கினார். நிகழ்வில் அறிமுகவுரையை செந்தூரனும், வெளியீட்டுரையை பிரதேச சபை உறுப்பினர் அ. சத்தியானந்தனும் வழங்கினர்.

விடுதலைப் போராட்டம் குறித்த பதிவாக பயங்கரவாதி முக்கியத்துவம் பெறுவதாக குறிப்பிட்ட பேராசிரியர் கலாநிதி சி. ரகுராம் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் எக்காலத்திலும் படிக்க வேண்டிய முக்கிய நூலாக இந் நாவல் அமையும் என்றும் குறிப்பிட்டார்.

அழகியல், மொழி, படிமம், நாவல் களம் என்பனவற்றில் பயங்கரவாதி தேர்ந்த நாவலாக இருப்பதாகவும் கலைத்திறனிலும் கலை அழகியலிலும் முதிர்ச்சி பெற்ற இந்த நாவல் ஈழ நாவல்களில் தனித்து நிலைத்திருக்கும் என்றும் சிரேஸ்ட விரிவுரையாளர் தி. செல்வமனோகரன் குறிப்பிட்டார்.

இதேவேளை நிகழ்வில் பேசிய போராளி எழுத்தாளர் வெற்றிச்செல்வி, இந்த நாவலில் வரக் கூடிய பாத்திரங்களோடும் களத்தோடும் தானும் வாழ்ந்த ஞாபகங்களை நினைவுபடுத்தியதுடன் தீபச்செல்வனின் கவித்துவமான மொழி பெரும் பிரமிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தீபச்செல்வனின் மனிதநேயம் மிக்க தலைசிறந்த படைப்பாளி என்று குறிப்பிட்டதுடன் கொள்கைக்காகவும் இனப்பற்றுக்காக உறுதியோடு பயணிக்கும் தீபச்செல்வன் ஒரு இலக்கியப் போராளி என்றும் புகழாராம் சூட்டினார்.

நிகழ்வில் ஏற்புரை ஆற்றிய தீபச்செல்வன், மக்கள் இன்று வழங்கியுள்ள மகத்தான வரவேற்பு தனக்கு சிறந்த உற்சாகத்தை தருகிறது என்றும் புகழுக்கும் பணத்திற்குமாக தான் எழுதுவதில்லை என்றும் இன விடுதலைக்கான எழுத்துப் பயணம் தொடரும் என்றும் கூறினார்.

இறுதிப் போர் நடைபெற்ற காலத்தில் தன்னை பயங்கரவாதியாக கூறி இலங்கை இராணுவம் அடக்கி ஒடுக்கிய நினைவுகளை பகிர்ந்ததுடன் அதனை சவாலாகக் கொண்டே அன்று போராட்டங்களில் ஈடுபட்டதாகவும் அக் காலத்து பயண நினைவுகள்தான் பயங்கரவாதி நாவலாக உருக்கொண்டது என்றும் குறிப்பிட்டார்.

தீபச்செல்வனின் உணர்வும் ஆழமும் அறிவும் கொண்ட உரைக்கு மக்கள் பெரும் வரவேற்பும் உற்சாகமும் அளித்தனர். நிகழ்வுகளை தொகுத்து வழங்கிய ஜனகா நீக்கிலஸ் நன்றியுரையை வழங்க நிகழ்வு நிறைவுபெற்றது.






**நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இம்முறை பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.**

**மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் வசிக்கும் மாவீரரின் மனைவியான பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு அவர்களின் இரு பிள்ளைகளின் கல்விச் செலவு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியிலான தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.**

